1970 நவம்பர் 30] [Dr. (Thirumathi) Satyavanimuthu]

housing scheme at an estimated cost of Rs. 3 crores on a 50 per cent grant and 50 per cent loan basis for the repatriates from Burma at Vyasarpadi and that the matter is under the consideration of the Government of India.

I would like to correct the above statement as follows:—

The Government of India were addressed for a housing scheme at an estimated cost of Rs. 3 crores on a 50 per cent grant and 50 per cent loan basis for housing the repatriates from Burma at Vyasarpadi and that the Government of India have raised a number of queries on the above proposal, and the matter is under examination here.

6. அரசினர் தீர்மானம்.

அவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 23 (1) வது விதியைத் தளர்த்தி தனியார் அலுவல்களை எடுப்பதற்கு முன்பாக அரசினர் அலுவல்களை முதலிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

7. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

8. தனியார் அலுவல்.

தீர்மானம்

தமிழ் மொழியையே பாட மொழியாகவும், பயிற்சி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் கொண்டுவர விரைந்து நடவடிக்கை எடுத்தல் குறித்து.

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன்